வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P . 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 07    22.12.2025 திங்கட்கிழமை    இதழ் : 356    பக்கங்கள் : 08




## தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் அமைதியின்மை

- மத, அரசியல் தலைவர்கள் ஐவர் கைது
- பெருமளவிலான பொலிஸார் குவிப்பு
- சிறீதரன் எம். பி. யும் தள்ளிவிடப்பட்டார்





த. பிரதீபன்

யாழ்ப்பாணம், டிசெ. 22

தையிட்டியில் பொது மக்களின் காணிகளில் அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற ஐவர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதனிடையே, போராட்டம் ஆரம்பமாகும் முன்னரே அந்தப் பகுதியில் கலகமடக்கும் பொலிஸார் பெருமளவில்

07

## தையிட்டி விகாரை பிரச்னைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும்!

### அமைச்சர் சுனில் செனவி

கொழும்பு, டிசெ. 22

தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்னைக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று புத்தசாசன மற்றும் கலாசார விவகார அமைச்சர் சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

தையிட்டி விகாரைக்கு எதிராக நேற்றைய தினம் போராட்டம் நடைபெற்றது. இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்னைக்கு விரைவில் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். எனினும், விகாராதிபதிக்கு பௌத்த கலாசாரத்தின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழே வழங்கப்படுகிறது. இது பாடசாலை உள்ளிட்ட இடங்களில் வழங்கப்படுவது போன்ற பதவி உயர்வு அல்ல.

"அத்துடன் தையிட்டி விகாரை பிரச்னையையும் விகாராதிபதிக்கு வழங்கப்படும் சான்றிதழ் நிகழ்வையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்த வேண்டாம். தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகள் குறித்து எனது அமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அளவீடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இதற்கமைய, விகாரைக்குச் சொந்தமான காணிகளை விகாரைக்கு வழங்கவும் ஏனைய காணிகளை உரிய மக்களிடம் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது" என்றும் அவர் கூறினார். (ஐ)

## புத்தூர் சந்தியில் விபத்து; இளைஞன் தலைசிதறி பலி!

### மற்றொருவரின் நிலை கவலைக்கிடம்

த. பிரதீபன்

புத்தூர் சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கார் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் புத்தூர் மணல் பகுதியை சேர்ந்த ஜெகநாதன் வினோஜன் (வயது 25) என்பவரே உயிரிழந்தார்.

07

## சீனாவின் முக்கிய தலைவர் நாளை இலங்கை வருகிறார்

கொழும்பு, டிசெ. 22

சீனாவின் மூன்றாவது சக்தி வாய்ந்த தலைவரான தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் தலைவரான ஷாவ் லெஜி நாளை செவ்வாய்க்கிழமை இலங்கை வருகிறார்.

இரு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக நாட்டுக்கு வருகை தரும் அவர், "சீன ஜனாதிபதி மற்றும் அவர் தலைமையிலான குழு, அண்மைய இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

07

## வவுனியாவில் வாள்வெட்டு; 19 வயது இளைஞர் மரணம்

குமார. கோகுலன்

வவுனியா, டிசெ. 22

குழுவாக சென்றவர்கள்மீது மற்றொரு குழுவினர் நடத்திய வாள்வெட்டில் 19 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா - வீரபுரம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், தவசிகுளத்தைச் சேர்ந்த யோ. அபிசாந் (வயது 19) என்பவரே உயிரிழந்தார்.

07

## வறிய மக்களின் நலனுக்காகவே ஜனாதிபதி நிதியம் பயன்படும்

### கிளிநொச்சியில் பிரதமர் ஹரிணி



கிளிநொச்சி, டிசெ. 22

"எமது அரசாங்கம் ஜனாதிபதி நிதியத்தை முற்று முழுதாக வறிய மக்களின் நலனுக்காகவே பயன்படுத்தும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ஹரிணி அமரசூரிய.

ஜனாதிபதி நிதியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வடக்கு மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி - இரணைமடு

07

## இந்தியாவுடனான இரகசிய ஒப்பந்தத்திலிருந்து விலகுக

### விமல் வீரவன்ஸ சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 22

மக்களின் உயிரை துச்சமாக மதிக்காமல் இனியாவது இந்திய 'பாமகோபியாவுடனான' (மருந்துகளுக்கான தரங்களை நிர்ணயிக்கும் இந்தியாவின் உத்தியோகபூர்வ கட்டமைப்பு) இரகசிய ஒப்பந்தத்திலிருந்து விலக வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

07

## ஜனவரி மாதமே ரில்வின் இந்தியா பயணமாவார்?

கொழும்பு, டிசெ. 22

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா எதிர்வரும் ஜனவரி மாதமே இந்தியா செல்லவுள்ளார் என்று அறிய வருகிறது.

முன்னதாக அவர் நவம்பர் மாத இறுதியில் இந்தியா செல்வதாக இருந்தது. ஆனால், டித்வா சூறாவளியை அடுத்து ஏற்பட்ட பேரிடரால் அவரின் பயணம் பிற்போடப்பட்டது.

இந்த நிலையில் ரில்வின் சில்வா ஜனவரி

07

## இன்று முதல் 'யாழ்ராணி' ரயில் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம் - அநுராதபுரம் இடையிலான யாழ்ராணி ரயில் சேவை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகிறது.

இதன்படி

07

## வரும் 28ஆம் திகதி முதல் வடக்கு, கிழக்குக்கு மழை

யாழ்ப்பாணம், டிசெ. 22

வங்காள விரிகுடாவில் எதிர்வரும் 28ஆம் திகதி புதிய காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இதனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மழை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியரும் காலநிலை அவதானிப்பாளருமான பேராசிரியர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் வெளியிட்ட

07

## வடக்கில் காற்றின் தரம் மிகமோசம்!

கொழும்பு, டிசெ. 22

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல் மாகாணங்களில் கடந்த சில நாட்களாக காற்றின் தரம் மிகமோசமாக உள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசு, சமத்துவ கட்சிகளின் தலைவர்கள் நேற்று சந்தித்தனர்

கிளிநொச்சி, டிசெ. 22

தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் சமத்துவ கட்சியின் பொதுச் செயலாளர் மு. சந்திரகுமாரும் நேற்று சந்தித்தனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள சமத்துவ கட்சியின் பணி மனையில் இந்த சந்திப்பு இடம் பெற்றது.

அரசியல் நிலைமைகள், எதிர் கால செயல்பாடுகள், புதிதாக உருவாக்கப்படவுள்ள பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் தமிழ் மக்களின் தரப்பாக எவ்வாறு செயல்படுவது போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில், சமத்துவ கட்சியின் தலைவர் சு.மனோகரன், கட்சியின் செயல்பாட்டாளர் பாலன் மாஸ்ரர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)



# நாட்டில் புதிய கலாசாரம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 22

நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு எமது அரசாங்கம் முன்மாதிரியாக செயல்படுகின்றது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், போதைப் பொருள் அச்சுறுத்தலில் இருந்து எமது இளைஞர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி நிதியத்தினால் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வட மாகாண மாணவர்களை பாராட்டும் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

இதில், விருந்தினராக பங்கேற்று உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வங்குரோத்து நிலையில் இருந்த நாடே எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் பொருளாதார ரீதியாக பிரச்சினைகள் இருந்தன. எனவே, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த துவதற்கு கடந்த ஒரு வருடமாக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் அரசியல் கலாசாரம் மாற்றப்பட்டு வருகின்றது. சிறந்தொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். புதிய அரசியல் கலாசாரம் என்றால் என்னவென்பதை நாம் செயலில் காட்டியுள்ளோம். பிரதமருக்கு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 33 இலட்சம் ரூபாய், ஆனால், எமது பிரதமர் 4 இலட்சம் ரூபாய்தான் பயன்படுத்துகின்றார். ஏனையவற்றை திறைசேரிக்கு அனுப்பி விடுகின்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சராக இருந்தால் , பாராளுமன்ற உறுப்பினருக்குரிய சம்பளம் மற்றும் அமைச்சருக்குரிய சம்பளம் கிடைக்கப்பெற்றது. சலுகைகளும் அப்படித்தான். ஆனால், எமது ஆட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை மட்டும் தாருங்கள், வேறு எதுவும் வேண்டாம் என அமைச்சர்கள் கடிதம் அனுப்பினர்கள். நாம் இரண்டு சம்பளம் பெறவில்லை.

அமைச்சர்களுக்கு கொழும்பில் வீடுகள் இருந்தன. அவற்றை நாம் பெறவில்லை. எமது சபாநாயகர்கூட சபாநாயகருக்குரிய அதிகாரபூர்வ இல்லத்துக்கு செல்லவில்லை. கடந்த காலங்களில் இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடின. இவற்றை ஒழிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து எமது இளைஞர் சமுதாயகத்தை நாம் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். போதைப்பொருள் வியாபாரிகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் கறுப்பு அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட எமது அரசாங்கத்துக்கு இருக்கும் மிக முக்கிய பொறுப்புகளில் இதுவும் ஒன்றாகும். நிச்சயம் போதைப்பொருளை ஒழிப்போம் - என்றார். (ஐ)

# சுகாதாரமற்ற முறையில் இயங்கிய உணவகம்மீது வழக்கு தாக்கல்

மன்னார், டிசெ. 22

கொத்து ரொட்டி தயாரிப்பதற்கான ரொட்டிகளை உரப்பையில் வைத்திருந்த உணவகம் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மன்னார் - மூர் வீதியிலுள்ள உணவகம் ஒன்றின்மீதே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த உணவகத்தை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனையிட்டனர். அனுமதியின்றி இயங்கி வந்த இந்த உணவகத்தில் சுகாதாரமற்ற முறையில் உணவுகள் தயாரிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. கொத்து ரொட்டி தயாரிப்பதற்கான ரொட்டிகள் உரப்பையில் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், கழிவு நீர் ஒழுங்காக வெளியேற்றப்படவில்லை. உணவு தயாரிப்பவர்கள் கையுறை, தலை உறை என்பவற்றை பயன்படுத்தாதிருந்த துடன், காலாவதியான பொருட்களை பயன்படுத்தியமையும் கண்டறியப்பட்டது.

உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். (ஐ)

# 60 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

பாணந்துறை, டிசெ. 22

பாணந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 60 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், சந்தேக நபரிடமிருந்து போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஐந்து கையடக்க தொலைபேசிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (எ)

# பேராதனை பல்கலையின் 3 பீடங்கள் 29 அன்று ஆரம்பம்

கண்டி, டிசெ. 22

டித்வா சூறாவளியால் தடைபட்டிருந்த பேராதனை பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கால்நடை மருத்துவ விஞ்ஞான பீடம், விவசாய பீடம், பல் மருத்துவ விஞ்ஞான பீடம் என்பவையு அன்றைய தினம் திறக்கப்படவுள்ளன என்று பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2026 ஜனவரி 05ஆம் திகதி விஞ்ஞானம் மற்றும் கலைப் பீடங்களை திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. முகாமைத்துவ பீடத்தை மீண்டும் திறப்பது குறித்து தீர்மானம் எடுக்கப்படவில்லை.

அனர்த்தத்தினால் சேதமடைந்த பல்கலைக்கழக சொத்துகளை மீட்டெடுக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றும் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மலையக மக்களுக்கு யாழ். இளைஞர் உதவி

யாழ்ப்பாணம், டிசெ. 22

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு யாழ். இளைஞர்களால் உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

விதையனைத்தும் விருட்சமே செயல் திட்டத்தின் மூலமாக 15இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆடைகள், உலருணவு பொதிகள், நிதி என்பன 246 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-05)

# திருவாசக அரண்மனையில் திருவாசகம் முற்றோதல்!

யாழ்ப்பாணம், டிசெ. 22

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை வளாகத்தில் திருவாசகம் முற்றோதல் நேற்று நடைபெற்றது.

இலங்கை முதலு தவிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெற்றது.



இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# இணுவில் கிராம மக்களால் வாகீஸ்பரன் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 22

உலகப்புகழ் பெற்ற கவித்துவக் கலைஞர் அருள்பரன் வாகீஸ்பரனை கௌரவிக்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இணுவில் அறிவாலயத்தில், இணுவில் கலைச்சமூகத்தின் ஏற்பாட்டில் இந்த கௌரவிப்பு விழா நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து வாகீஸ்பரன், அவரின் பெற்றோர் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.



இணுவில் கந்தசுவாமி ஆலயம் முன்பாக வாகீஸ்பரனுக்கு வேல் வழங்கப்பட்டது. தொடர்ந்து இணுவில் அறிவாலயத்தில் நிகழ்விகள் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# யாழ்ப்பாணம், மட்டக்களப்பிலும் ரயில் கட்டணத்தை மீளப்பெறலாம்

கொழும்பு, டிசெ. 22

கொழும்பு தவிர, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட மாவட்டங்களிலும் ரயில் பயணச்சீட்டு கட்டணத்தை மீளப்பெறும் வசதி விரிவுபடுத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 25ஆம் திகதி முதல் இந்த புதிய வசதிகள் அமுலுக்கு வரவுள்ளன. இதுவரையில் தொடருந்து பயணச்சீட்டுகளுக்கான கட்டணத்தை மீளப்பெறும் வசதி கொழும்பு கோட்டை, மருதானை புகையிரத நிலையங்களில் மட்டுமே செயல்பாட்டில் இருந்து வருகிறது.

இந்தநிலையில், டிசெம்பர் 25 முதல் பதுளை, எல்லை, பண்டாரவளை, அப்புத்தளை, நானுஓயா, ஹற்றன் ஆகிய இடங்களில் குறித்த வசதி கிடைக்கும். அத்துடன், அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் சோதனை அடிப்படையில் பணத்தை மீளப் பெறும் சேவைகள் அறிமுகப்படுத்தப்படும்.

மேலும் ஜனவரி முதல் கண்டி ரயில் நிலையத்திலும் குறித்த வசதி அறிமுகப்படுத்தப்படும் - என்று தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் இதனை அறிவித்துள்ளார். (ஐ)

# காங்கேசன்துறை கடற்கரை சிரமதானம் மூலம் தூய்மை

யாழ்ப்பாணம், டிசெ. 22

தூய்மையான இலங்கை திட்டத்தின் கீழ் காங்கேசன்துறை கடற்கரை பகுதி நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் செய்யப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்களுடன், வலி. வடக்கு பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் இந்த சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நிகழ்வில் காங்கேசன்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
22.12.2023 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ஜெயசங்கரிடம் சொல்ல வேண்டியவை

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இன்று இலங்கை வரவுள்ளார். இலங்கை டித்வா புயலால் மோசமாக பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியா விரைந்து உதவியது. அது, இந்தியாவின் அயல்நாடுகள் தொடர்பான கொள்கை நிலைப்பாடு. அவைகள் உடனடி மீட்புப் பணிகள் என்னும் அடிப்படையில் அமைந்திருந்தன. இந்திய படையினர் உடனடி உட்கட்டுமான பணிகள், மருத்துவ பணிகள் என்று பல விடயங்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு நீண்டகால மீட்சிக்கான உதவிகளை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே ஜெய்சங்கரின் விஜயம் அமையவுள்ளது. இந்த விஜயத்தின்போது, அவர் இந்தியாவின் அடுத்த கட்ட உதவிகளை ஆராய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாடு வரலாற்று ரீதியான பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டு - திவாலான வேளையில் இந்தியா உடனடியாக 400 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கி உதவியது.

இலங்கையின் அமைவிடத்தின் மூலோபாய முக்கியத்துவமும் இந்தியாவுக்கு மிகவும் அருகாமையிலுள்ள உடனடி அயல்நாடு என்னும் வகையிலும் இந்தியாவின் மேற்பார்வையும் தலையீடுகளும் தவிர்க்க முடியாதவை. இதனைப் புரிந்துகொண்டால் இலங்கை விடயத்தில் இந்தியாவின் கரிசனைகளை புரிந்துகொள்வதில் சிக்கல்கள் இருக்காது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் அமைச்சர் ஜெய்சங்கர் தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார். அவர் இதற்கு முன்னரும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்திருக்கிறார். அப்போது என்ன கூறினாரோ அதனைத்தான் மீண்டும் கூறுவார். ஏனெனில், ஒரு நாட்டின் கொள்கை நிலைப்பாடு என்னவோ அதனைத்தான் அவர்கள் கூறுவார்கள். இந்த நிலையில் அவரைச் சந்திக்கவுள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இன்றைய சூழலில் எதனைக் கூற வேண்டும்? எதனைக் கூறுவது இராஜதந்திர அடிப்படையில் சரியாக இருக்கும்?

முன்னைய சந்திப்பு ஒன்றில் அவர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்குக் கூறியிருந்தார் - அதாவது, முப்பது வருடங்களுக்கு மேலாக பாலத்துக்குக் கீழே தண்ணீர் ஓடிவிட்டது - அதாவது அன்றைய சூழலில் பேசிய விடயங்களை இன்றைய சூழலில் பேச முடியாது. அவர் மறைமுகமாக உணர்த்த முற்பட்டது இன்றைய சூழலில் இந்தியாவால் என்ன செய்ய முடியுமோ அதனைத்தான் செய்ய முடியும் - ஒரு காலத்தில் எதிர்பார்த்ததை இன்னொரு காலத்தில் எதிர்பார்க்க முடியாது. இதனைப் புரிந்து கொண்டுதான் தமிழ்க் கட்சிகள் தங்களின் கோரிக்கைகளை அவரிடம் முன்வைக்க வேண்டும்.

தேசிய மக்கள சக்தி அரசாங்கம் மாகாண சபைகள் தேர்தலை நடத்துமா என்னும் கேள்வி உண்டு. அதிலும், புயல் பாதிப்புகளுக்கு பின்னர் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பு இன்னும் சுருங்கியிருக்கிறது. இவ்வாறானதொரு நிலையில்

ஓர் அழுத்தம் இன்றி மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை. இந்தியா, சற்று அழுத்தம் திருத்தமாக கூறினால் மட்டுமே தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்பு உண்டு.

ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, மாகாண சபைகளையே இல்லாதொழிக்க வேண்டும் ஏனெனில், அது ஒரு தோல்வியடைந்த முறைமை என்னும் அடிப்படையில் கருத்துகளை முன்வைத்து வருகிறார். இந்த நிலையில் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை உங்களைத் தவிர வேறு எவராலும் முன்வைக்க முடியாது - என்பதை தமிழ்க் கட்சிகள் ஜெய்சங்கரிடம் வலியுறுத்த வேண்டும். அதைவிடுத்து, சமஷ்டி தீர்வுக்கு அழுத்தம் கொடுங்கள் என்றால் - அவர் மீண்டும் பாலத்துக்குக் கீழே நீர் ஓடிவிட்டது என்பதைத்தான் பதிலாக தருவார். ஒரு நாட்டின் வெளிவிவகார கொள்கையைப் புரிந்து கொள்ளாமல் தொடர்ந்தும், அந்த நாட்டிடம் கோரிக்கைகளை முன்வைப்பதானது தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போரின் அரசியல் முதிர்ச்சியின்மையையே அடையாளம் காட்டும்.

# இலங்கை டிஜிற்றல் மயமாக்கலுக்கு உலக வங்கி 50 மில்லியன் டொலர்கள்

*கொழும்பு, டிசெ. 22*

இலங்கையின் டிஜிற்றல் பரிமாற்றத் திட்டத்திற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்க உலக வங்கி அங்கீகாரம் அளித்துள்ளது.

நாட்டின் டிஜிற்றல் துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதோடு, நவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை மேம்படுத்துதல், அரசாங்கத்தின் நிர்வாக நடைமுறைகளை டிஜிற்றல் மயமாக்குவதன் மூலம், அரச சேவைகளை வினைத்திறன் மிக்கதாக மாற்றுதல், பொதுமக்களுக்கான அரச சேவைகளை அவர்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறும், மக்களின் தேவைகளுக்கு விரைவாகப் பதிலளிக்கக் கூடியவாறும் மாற்றியமைத்தல் போன்றவற்றை நோக்காக கொண்டு அந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை டிஜிற்றல் மயமாக்கல் ஊடாகப் பலப்படுத்துவதற்கு இந்த நிதிப் பங்களிப்பு ஒரு முக்கிய மைல்கல்லாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கடலில் நீராடிக்கொண்டிருந்த வெளிநாட்டு பிரஜை மரணம்!

*காலி, டிசெ. 22*

ஹிக்கடுவை - வேவல பகுதியில் உள்ள கடலில் மூழ்கி வெளிநாட்டு பிரஜை ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை காலை இந்த சம்பவம் இடம்பெற்றது. உயிரிழந்தவர் 54 வயதான, பெலாருஸ் நாட்டைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

இவர் ஹிக்கடுவை கடலில் நீராடிக்கொண்டி ருந்த போது திடீரென கடலில் அடித்துச் செல்ல ப்பட்டுள்ள நிலையில் பிரதேசவாசிகள் மற்றும் பொலிஸ் உயிர்காப்பு அதிகாரிகளால் மீட்கப்பட்டு பலப்பிட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.(எ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்

*அநுராதபுரம், டிசெ. 21*

அநுராதபுரம், தம்புத்தேகம - மலி யதேவபுர பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்ததாக தம்புத் தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தம்புத்தேகம - மலியதேவபுர பகுதியைச் சேர் ந்த 48 வயதுடையவர் என தெரி விக்கப்படுகிறது.

இவர் நெல் வயலில் இருந்தபோது காட்டு யானை தாக்கியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# மறைத்து வைக்கப்பட்ட 53 கிலோ கஞ்சா சிக்கியது!

*கிளிநொச்சி, டிசெ. 22*

கிளிநொச்சியில் சட்டவிரோதமான முறையில் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 53 கிலோ கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இராணுவத்துக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய நேற்று ஞாயிற்றுக்கிழமை இராணுவம், தருமபுரம் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் சுண்டிகுளம் கலப்பு காட்டுப்பகுதியில் சோதனையை முன்னெடுத்தனர்.

இதன்போதே மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதிகளை அவர்கள் கைப்பற்றினர். 53 கிலோ 500 கிராம் கஞ்சா இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருவதாகவும் தருபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய விபச்சார விடுதி முற்றுகை

*கொழும்பு, டிசெ. 22*

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பகுதியில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதி ஒன்று சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.


வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த விபச்சார விடுதியை நிர்வகித்த சந்தேகநபர் ஒருவரும், 09 வெளிநாட்டுப் பெண்களும் கைது செய்யப்பட்டு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

ஜா-எல பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய ஒருவரும், 25 முதல் 41 வயதுக்குட்பட்ட தாய்லாந்து பெண்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைக்குள் நெருக்கம் உண்டாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். கேட்ட இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

**மிதுனம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். மனைவி வழியில் அனுகூலம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் அடிப்படை வசதியை மேம்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. அக்கம் பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
பழைய இனிய சம்பவங்களை நினைத்து மகிழ்வீர்கள். எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய பிரச்னைகள் தீரும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மறதியால் பிரச்னைகள் வந்து நீங்கும். குடும்பத்தாருடன் இணக்கமாக செல்லவும். அடுத்தவர்களின் மனம் காயம்படும் படி பேசாதீர்கள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். விலை உயர்ந்தப் பொருட்களை கவனமாக கையாளுங்கள். யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**மீனம்**
எதையும் தாங்கும் மன பலம் கிடைக்கும். உடன் பிறந்தவர் பாசமழை பொழிவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். மதிப்புக் கூடும் நாள்.

நத்தார், புதுவருட பண்டிகை காலத்தை முன்னிட்டு

# மன்னாரில் கடைகள் ஏல விற்பனை மூலம் 4 கோடி ரூபாயை தாண்டியது வருமானம்

மன்னார், டிசெ. 22

மன்னார் நகர எல்லைக்குள் நத்தார், புதுவருட பண்டிகை கால வியாபார நடவடிக்கைகளுக்கு கடைகள் அமைக்க இடம் ஏல விற்பனை மூலம் வழங்கப்பட்ட நிலையில் நகர சபைக்கு சுமார் 4 கோடி ரூபாய்க் கும் அதிகமான வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், கடந்த காலங்களில் ஊழல் இடம்பெற்றுள்ளமைக்கு குறித்த வருமானம் ஒரு எடுத்துக் காட்டு என மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நகர சபையால் 2025 ஆம் ஆண்டுக்கான பண்டிகைக்கால வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏல விற்பனை மூலம் இடம் வழங்கப்பட்டது.

மன்னார் நகர சபை பிரிவில் 339 தற்காலிக வியாபார நிலையங்களை அமைக்க இடம் அடையாளம் காணப்பட்டது.

அதில் 284 கடைகள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வரை ஏல விற்பனை செய்யப்பட்டன. இதன் ஊடாக மன்னார் நகர சபைக்கு 4 கோடியே 85 ஆயிரத்து 866 ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

மேலும், 55 கடைகள் ஏல விற்பனைக்கு செல்லவுள்ளன. அதனூடாக வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். குறித்த வருமானங்களை வைத்துக்கொண்டு மன்னார் நகர சபை பிரிவில் மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த குறித்த நிதி 2026 ஆம் ஆண்டு பாதீட்டில் பயன்படுத்தப்படவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அனர்த்த நிலை ஏற்பட்ட போது நகர சபைக்கு வருமான இழப்பு ஏற்படும் என்ற நிலை காணப்பட்டது.

ஆனால், கடந்த காலங்களை விட வெளிப் படை தன்மையுடன் ஏல விற்பனை இடம் பெற்றமையால் இம்முறை 4 கோடி ரூபாய்க்கும் அதிக வருமானம் கிடைக்க பெற்றுள்ளது.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகவும் குறைந்த அளவிலான வருமானமே மன்னார் நகர சபைக்கு கிடைக்கப்பெற்றது என்றும் அவர் கூறினார்.

(எ)

# மக்களுக்கு உதவ முடியவில்லை என்றால் நானும் பதவியை இராஜினாமா செய்கிறேன்

## அதிகாரிகள் மீது ரஜீவன் எம். பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 22

மக்களுக்கு உதவ முடியவில்லை என்றால் நானும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்கிறேன் என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தெரிவித்தார்.

தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அந்த பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது, பாராளுமன்ற உறுப்பினராக எனக்குள்ள அதிகாரத்தையும் தாண்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவச் சொல்லி பல அரச அதிகாரிகளை கெஞ்சிக் கேட்டேன். பலர் உதவினார்கள். சிலர் உதவவே இல்லை. அதனை மன்னிக்க முடியாது.

அப்படியானவர்கள் தங்கள் பதவியை உறுதிப்படுத்த பாடுபட்டார்களே தவிர மக்களுக்கு உதவவில்லை. உரிய விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வை வழங்குவேன்.

மக்களுக்கு உதவ முடியவில்லை என்றால் நானும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்கிறேன்.

எனக்கு உதவ ஆயிரம் வழிகள் உண்டு. அதே போன்று அதிகாரம் உள்ள யாரும் மக்களுக்கு நல்லது செய்ய பின் நிற்கக் கூடாது என குறிப்பிட்டுள்ளார்.

# "பேரிடரை எதிர்கொள்ளல்: நல்லூரில் வெள்ளம்" யாழ். பல்கலைக்கழகத்தில் விசேட கருத்தமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞான பிரிவின் ஏற்பாட்டில் "பேரிடரை எதிர்கொள்ளல்: நல்லூரில் வெள்ளம்" என்ற தொனிப் பொருளில் அமைந்த கருத்தமர்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் திருமதி மைதிலி ரவீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில் "பருவநிலை மாற்றமும் வெள்ளப்பெருக்கும்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா உரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் "மௌனம் கலைதல்" என்ற செயல்விளக்க நாடக ஆற்றுகையும் நடைபெற்றது. அத்துடன் பல்கலைக்கழக கல்வியாளர்களும் துறைசார் நிபுணர்களும் கலந்துகொண்ட குழுநிலைக் கருத்தமர்வும் நடைபெற்றது.

பேரிடரை எதிர்கொள்ளல் என்ற குழுநிலைக் கருத்தமர்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் கணபதி கஜபதி, புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி ஏ. அன்ரனிராஜன், கலாநிதி பிரதீபா விபுலன், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் வடக்குக்கான உதவிப் பொது முகாமையாளர் ஏந்திரி. ஏகாம்பரநாதன் ஜெகதீசன், யாழ். மாநகர சபையின் தலைமைப் பொறியியலாளர் ஏந்திரி இராசையா சுரேஸ்குமார், நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஏந்திரி. குணராஜ் சுஜீவன் மற்றும் நல்லூர் உதவிப் பிரதேச செயலாளர் இராமலிங்கம் சிவகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-03)

# தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு காணியை பெறுவதற்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமையவுள்ள "தென்மராட்சி கிழக்கு" பிரதேச செயலகத்துக்கான காணியை பெற்றுக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் சாவகச்சேரி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரான்சிஸ் சந்திரா சத்திய சோதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் பொன்னையா குகதாசன், அரச அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண் டனர்.

இதன்போது பிரதேச செயலகத்தை அமைப்பதற்கான 20 பரப்புக்கு மேற்பட்ட காணிகளை வழங்குவதற்கு நான்கு நன்கொடையாளர்கள் முன்வந்தனர்.

மேலும், நன்கொடையாளர்கள் காணிகளை வழங்குவதற்கு முன்வருவதற்கான திகதி இம் மாதம் 31ஆம் வரை வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வழங்க முன்வருபவர்களுடைய காணிகளிலிருந்து பொருத்தமான காணியை தெரிவு செய்து, அவ்விடத்தில் பிரதேச செயலகத்தை அமைப்பதற்கு பரிந்துரை செய்யப்படும் என குறித்த கலந்துரையாடலில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

(எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டித்வா புயல் பாதிப்பு - மீட்பு:

# அடுத்த மூன்று வருடங்களில் ரூ. ஒரு இலட்சம் கோடி செலவு

கொழும்பு, டிசெ. 22

டித்வா புயலால் ஏற்பட்ட சேதங்கள் - மீட்பு - நிவாரண பணிகளுக்காக அடுத்த மூன்று வருடங்களில் ஒரு இலட்சம் கோடி ரூபாயை செலவிட வேண்டியுள்ளது என்று திறை சேரியின் பிரதி செயலாளர் ஏ. கே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் பணிகளுக்காக இந்த மாதத்தில் நிவாரணத்துக்காக சுமார் 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அத்துடன், பிரதான வீதிகளின் அபிவிருத்திக்காக 11 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி செலவாகும்.

இதேநேரம், பாலங்களை மீண்டும் அபிவிருத்தி செய்வது போன்ற சில நடவடிக்கைகளுக்கு 18 மாதங்கள் அல்லது அதற்கு மேல் ஆகலாம் - என்றும் அவர் மேலும் கூறினார்.

# பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களை வலுப்படுத்துவதற்கு ஐ. நா. ஆதரவு



கொழும்பு, டிசெ. 22

'டித்வா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களை உளசமூக ரீதியாக வலுப்படுத்தவும் அவர்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்கவும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சில் அண்மையில் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. பேரழிவுகளுக்கு பின்னர் மகளிர், சிறுவர்களுக்காக வழங்கப்பட்டு வரும் உளசமூக ஆற்றுப்படுத்தல் சேவைகளை மேலும் விரிவுபடுத்துவது இந்தக் கலந்துரையாடலின் பிரதான நோக்கமாக அமைந்திருந்தது.

தனித்தனியான திட்டங்களை செயல்படுத்துவதை விட, தற்போதுள்ள அரசாங்க முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதே சிறந்த அணுகுமுறை எனக் குறிப்பிடப்பட்டது. இதற்கு இணக்கம் தெரிவித்த ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களை உளசமூக ரீதியாக வலுப்படுத்தவும் அவர்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்கவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் தலைமையிலான அரசாங்க முயற்சிகளுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

பேரழிவுக்கு பிந்தைய உளசமூக ஆற்றுப்படுத்தற் சேவைகளில் குறிப்பாக, பெண்கள் மற்றும் குடும்பங்களை இலக்காகக் கொண்டு வழங்கப்படும் சேவைகளுக்காக ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் தொழில்நுட்ப பங்காளராக செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# போதைப்பொருட்களுடன் 945 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, டிசெ. 22

நாடு முழுவதும் நடத்தப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்பில் 945 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

285 கிராம் ஹெரோயின், 637 கிராம் ஐஸ், ஒரு கிராம் கொக்கெய்ன், 3 கிலோ 432 கிராம் கஞ்சா, 6 ஆயிரத்து 178 கஞ்சா செடிகள், 25 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 54 கிராம் ஹஷீஷ் ரக போதைப் பொருள், 446 போதை மாத்திரைகள், 117 கிராம் 410 மில்லிகிராம் மதனமோதகம், 174 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்களில் 17 பேரை மறுவாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# வெவ்வேறு விபத்துகளில் நால்வர் உயிரிழந்தனர்!

கொழும்பு, டிசெ. 22

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துகளில் நேற்று முன்தினம் மட்டும் நால்வர் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணம் - பொம்மைவெளியில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் தடுமாறி விழுந்த பெண்ணை பின்னால் வந்த பவுஸர் மோதியதில் அவர் உயிரிழந்தார். இதில், வட்டுக்கோட்டையை சேர்ந்த 63 வயதான பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, திம்புலபத்தனை பொலிஸ் பிரிவில் ஹற்றன் - நுவரெலியா வீதியில் பத்தன சந்திக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர். லொறி கட்டுப்பாட்டை இழந்து பஸ்ஸை மோதியதில் இருவரும் உயிரிழந்தனர்.

இதேநேரம், திஸ்ஸமஹாராமை பொலிஸ் பிரிவில் நடந்து சென்றவரை பேருந்து மோதியதில் 71 வயது நபர் உயிரிழந்தார்.

# சிகரெட்களுடன் வர்த்தகர் கைது

கொழும்பு, டிசெ. 22

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 63 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று அதிகாலை விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைதானவரிடமிருந்து 42 ஆயிரம் சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன. கைதானவர் கொழும்பு - அவிசாவளை, எபலபிட்டியை சேர்ந்த 21 வயது வர்த்தகராவார். (ஐ)

# நீரில் மூழ்கி குழந்தை பலி

கொழும்பு, டிசெ. 22

நீர் நிறைந்த குழியில் விழுந்து குழந்தை ஒன்று உயிரிழந்தது.

பொலநறுவை - அரலகங்வில பொலிஸ் பிரிவில் கந்தேகம பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 2 வயதான ஆண் குழந்தையே உயிரிழந்தது.

# அரசு மக்களின் பிரச்னைகளை புரிந்து தீர்வு வழங்க வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்



கொழும்பு, டிசெ. 22

அரசாங்கம் வெறும் மேடைப் பேச்சுகளுடன் நின்றுவிடாமல், களத்துக்கு சென்று மக்களின் உண்மையான பிரச்னைகளைப் புரிந்துகொண்டு தீர்வுகளை வழங்க முன்வர வேண்டும் - என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தால் மக்கள் கடும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர். ஒருபுறம் அவர்கள் வாக்களித்து அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்தினார்கள், மறுபுறம் மக்கள் ஆபத்தில் இருக்கும்போது அவர்களுக்குத் துணையாக நிற்க அரசாங்கம் தவறிவிட்டது. இதனால் மக்கள் மத்தியில் ஆளும் தரப்பு மீதான நம்பிக்கை சரிந்துள்ளது.

பலத்த மழையால் கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நிவாரண உதவிகள் முறையாக மக்களை சென்றடையவில்லை.

சுகாதார துறையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பான சர்ச்சைகளை அவர் கடுமையாகச் சாடினார்.

ஜே. வி. பி. எப்போதும் ஒழுக்கம் மற்றும் விநயம் பற்றிப் பேசும் ஒரு கட்சி. தற்போதைய அரசாங்கத்தில் உள்ளவர்களின் செயல்பாடுகள் அதற்கு முரணாக இருக்கிறது. பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகள் அரசியல் அழுத்தங்களுக்கு அஞ்சி செயல்பட வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. அரசாங்கம் வெறும் மேடைப் பேச்சுகளுடன் நின்றுவிடாமல், களத்துக்கு சென்று மக்களின் உண்மையான பிரச்னைகளைப் புரிந்துகொண்டு தீர்வுகளை வழங்க முன்வர வேண்டும் - என்றார். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு, மத்திய மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும்

கொழும்பு, டிசெ. 22
கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் பொலநறுவை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங் களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப் படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.(எ)

## கண்டி மாநகர சபையின் பட்ஜெட் நிறைவேறியது

கண்டி, டிசெ. 22
கண்டி மாநகர சபைக்கான தேசிய மக்கள் சக்தியின் முதலாவது வரவு- செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது கண்டி மாநகர சபையின் அதிகாரம் தேசிய மக்கள் சக்தியின் வசம் உள்ளது.

மாநகர முதல்வர் சந்திரசிறி விஜேநாயக்க தலைமையில் நடைபெற்ற சபை அமர்வில், 2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் 25இற்கு 20 என்ற வாக்கு வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த வாக்கெடுப்பின் போது, சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த ஓர் அங்கத்தவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அதே நேரத்தில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் வரவு- செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களித்திருந்த போதும், சபை அமர்வின் போது எவரும் அதற்கு எதிராக கருத்து தெரிவிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (எ)

## மண்மேட்டில் மோதி பாரவூர்தி விபத்து!

நானுஓயா, டிசெ. 22
நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரதல்ல குறுக்கு வீதியில் பாரவூர்தி ஒன்று செங்குத்தான வளைவு ஒன்றில் கட்டுப்பாட்டை இழந்து மண் மேட்டில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வெளிமடையிலிருந்து நுவரெலியா வழியாக ஹற்றன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பாரவூர்தியில் திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக பிரேக் இயங்காமை காரணமாக சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

எனினும், பாரவூர்தியில் பயணித்தவர்கள் அதிஷ்ட வசமாக சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## திடீரென அதிகரித்த மரக்கறிகளின் விலை

நுவரெலியா, டிசெ. 22
நாட்டில் நிலவும் மோசமான வானிலையால் பல விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக மரக்கறிகளின் விலைகளும் இந்த நாட்களில் வேகமாக அதிகரித்து வருகின்றன.

மலையகத்தின் மரக்கறிகளுடன் ஒப்பிடும்போது, தாழ் நிலப் பகுதிகளின் மரக்கறிகளின் விலைகள் கணிசமாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இலங்கை மத்திய வங்கியின் தினசரி விலைப் பட்டியலின்படி புறக்கோட்டை, தம்புள்ளை மற்றும் நாரஹேன்பிட்டி பொருளாதார மையங்களில் ஒரு கிலோ கிராம் போஞ்சி 600 ரூபாய் முதல் 800 ரூபாய் வரை சில்லறை விலையிலும், ஒரு கிலோ கிராம் தக்காளி 500 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை சில்லறை விலையிலும், ஒரு கிலோ கிராம் வாழைப்பழம் 600 ரூபாய் முதல் 700 ரூபாய் வரை சில்லறை விலையிலும், ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாய் 1100 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை சில்லறை விலையிலும் விற்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் கத்தரிக்காய் 100 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை சில்லறை விலையிலும் விற்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் கரட் 550 ரூபாய் முதல் 800 ரூபாய் வரையிலும் மற்றும் கோவா 300 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சில்லறை விலையிலும் விற்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மட்டக்களப்பில் வேகமாக டெங்கு பரவல் அதிகரிப்பு

### சுற்றுச்சூழல் தூய்மையை பேணுமாறு மக்களுக்கு சுகாதார துறை கோரிக்கை

மட்டக்களப்பு, டிசெ. 22
மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் வேகமாக அதிகரிக்கும் நிலைமை காணப்படுவதனால் மக்களை தமது சுற்றுச்சூழல்கள் தொடர்பில் அவதானமாக செயல்படுமாறு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆர். முரளீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் டெங்கு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வகையிலான பாரிய டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு வாவிக்கரை பூங்கா தொடக்கம் மட்டக்களப்பு கல்லடி பாலம் வரையிலான மூன்று கிலோ மீற்றர் வடிகான்களையும் வீதியின் மருங்குகளையும் தூய்மைப் படுத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, மட்டக்களப்பு மாநகர சபை, மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் இணைந்து இந்த சிரமதான பணியை முன்னெடுத்தனர்.

இதன் ஆரம்ப நிகழ்வு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆர். முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன், மாநகர சபையின் ஆணையாளர் என். தனஞ்செயன், பிரதி ஆணையாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் லிங்கேஸ்வரன், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி எம். உதய குமார், பொதுச்சுகாதார பரி சோதகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த சிரமதான பணியில் மட்டக்களப்பு மாநகர சபை ஊழியர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது, வடிகான்கள் தூய்மைப்படுத்தப்பட்டதுடன் வடிகான்களுக்குள் கழிவு நீரை வெளியேற்றுவோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் வீதிகளின் அருகில் நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவான இடங்களும் தூய்மைப்படுத் தப்பட்டன. இந்த சிரமதான பணியின்போது வீதிகளில் காணப்பட்ட பெருமளவான கழிவுப்பொருட்களும் மாநகர சபையினரால் அகற்றப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த பணிப்பாளர் ஆர். முரளீஸ்வரன் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒவ்வொரு பருவகால மழை வீழ்ச்சிக்கு பிறகும் டெங்கு நோயாளர்கள் அதிகரித்து வருவதன் காரணத்தால் நுளம்பு பெருகும் இடங்கள் ஒவ்வொரு ஆண்டும் சிரமதான பணிகள் மூலம் தூய்மைப் படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சுகாதார அலுவலக பிரிவுகளில் ஒவ்வொரு நாளும் டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டு வருகின்றனர். இது அதிகரிக்கின்ற அபாய நிலை காணப்படுகின்றது. மழைக்கு பின்னர் இதன் அபா யத்தன்மை மிக அதிகமாக காணப்படுகின்றது.- என்றார். (எ)

## மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

கண்டி, டிசெ. 22
கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரி வித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை மாலை முதல் அமுல்படுத்தப்பட் டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் தொலுவ, உடுதும்பர, மினிப்பே,மெததும்பர ஆகிய பகுதிகளுக்கும் நுவரெலியா மாவட்டத்தின் மதுரட, நில் தண்டாஹின்ன, வலப்பனை, ஹங்குரன்கெத்த ஆகிய பகுதிகளுக்குமே மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இதனால், அப்பகுதி மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது. (எ)

## கற்கள் சரிந்து விழுந்ததில் 6 குடும்பங்கள் இடம்பெயர்வு

பதுளை, டிசெ. 22
பதுளையில் ஹல்தும்முல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாலதொல - பின்னலந்த பகுதியில் கற்கள் சரிந்து விழுந்துள்ளதாக ஹல்தும்முல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அனர்த்தம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இதனால் அப்பகுதியில் வசிக்கும் 11 பேர் கொண்ட 6 குடும்பங்கள் பாதுகாப்பு கருதி இடம்பெயர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குடும்பங்களை தற்காலிய தங்குமிடங்களில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## கண்டியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான முதியவர் மரணம்!

கண்டி, டிசெ. 22
தலாத்துஓயா - குருந்தெனிய பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

குளவித் தாக்குதலுக்குள்ளாகி நான்கு பேர் காயமடைந்து, தலாத்துஓயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது, மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே ஒருவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் குருந்தெனிய பகுதியைச் சேர்ந்த 73 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

## மண்சரிவு அபாயம்: புஸ்ஸல்லாவையில் 7 கடைகள் மூடல், மக்கள் வெளியேற்றம்

நுவரெலியா, டிசெ. 22
கம்பளை - நுவரெலியா பிரதான வீதியில் புஸ்ஸல்லாவை நகரில் அமைந்துள்ள 7 வர்த்தக நிலையங்கள் மண்சரிவு அபாயம் காரணமாக மூடப்பட்டதுடன் அங்கிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

குறித்த வர்த்தக நிலையங்களில் திடீரென வெடிப்புகள் ஏற்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அபாய நிலை குறித்து புஸ்ஸல்லாவை பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு வழங்கினர்.

சீரற்ற வானிலை காரணமாக புஸ்ஸல்லாவை நகருக்கு அருகிலுள்ள சென்குவாரி தோட்டத்தில் மேல் பகுதியில் நிலத்தில் வெடிப்புகள் ஏற்பட்டு மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, புஸ்ஸல்லாவை நகருக்குக் கீழே அமைந்துள்ள புஸ்ஸல்லாவை பல்லேகம பிரிவிலும் நிலத்தில் இவ்வாறான வெடிப்புகள் காணப்படுவதுடன் அந்த இடங்களைச் சீர்செய்யும் பணிகளில் பிரதேச மக்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி...

குவிக்கப்பட்டிருந்தனர். போராட்டத்தை அவர்கள் தடுக்க முனைந்தமையை தொடர்ந்து குழப்பமும் அமைதியின்மை ஏற்பட்டது.

தையிட்டி திஸ்ஸ ரஜ மக விகாரை அமைந்துள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்றும் அந்த விகாரையின் விகாராதிபதிக்கு அதிகாரம் வழங்கப்படுவதற்கும் எதிர்ப்பு தெரிவித்தும் நேற்று ஞாயிற்றுக்கிழமை விகாரைக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்க பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் உட்பட 29 பேருக்கு எதிராகப் பொலிஸார் பெயர் குறிப்பிட்டு தடை உத்த ரவு பெற்றிருந்தனர். அந்தப் பட்டியலை போராட்ட இடத்தில் பொலிஸார் காட்சிப்படுத்தியிருந்தனர்.

போராட்டம் ஆரம்பமாகும் முன்னரே அந்தப் பகுதி யில் பெருமளவில் கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப் பட்டிருந்தனர். போராட்டத்தை ஆரம்பிக்க விடாமல் அவர்கள் தடுக்க முனைந்தனர். இதனால், இரு தரப்பின ருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

இதன்போது, "இது ஓர் அமைதி வழிப் போராட் டம். இங்கு எந்த விதத்திலும் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கப்படவில்லை. விகாரைக்குள் போராட்டக்காரர்கள் செல்லவோ, விகாரைக்குச் சேதம் விளைவிக்கவோ இல்லை. அவ்வாறிருக்கையில், விகாரைக்குச் செல்லும் வீதியை நீங்கள் எவ்வாறு அடாத்தாக மறித்து வைத்திருக்க முடியும்?", எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், தொடர்ந்தும் அவ்விடத்தில் போராட முற்பட்டனர். இதன்போது, பொலிஸார் பலவந்தமாக போராட்டக்காரர்களை வெளியேற்ற முற்பட்டனர். பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதன்போது, அங்கு நின்றிருந்த சிறீதரன் எம். பியையும் பொலிஸார் தள்ளினர். இதில், அவர் நிலைகுலைந்துபோனார்.

தொடர்ந்து, வேலன் சுவாமி உள்ளிட்டவர்களை இழுத்துச் சென்று கைது செய்து பொலிஸ் வாகனத்தில் ஏற்றினர். இதேபோன்று,வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி. நிரோஷ், வலி. கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களை விடுவிக்குமாறு போராட்டத்தில் பங்கேற்ற சிறீதரன் எம். பி. உள்ளிட்டவர்கள் வலியுறுத் திய நிலையில், போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றாலே அவர்களை விடுவிப்போம் என்று பொலிஸார் கூறினர்.

இதைத் தொடர்ந்து சிலர் அங்கிருந்து வெளியேறி னர். எனினும், போராட்டம் தொடர்ந்தது. கைதானவ ர்கள் பலாலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்ப ட்டு மாலைவேளை மல்லாகம் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் காயத்திரி அகிலனின் இல்லத்தில் முற்படுத் தினர்.

நீதிவான் அவர்கள் ஐவரையும் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் செல்ல அனுமதித்தார். அத்துடன், இது தொடர்பான வழக்கை எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ)

## புத்தூர்...

சம்பவம் தொடர்பில் அறிய வருபவை வருமாறு,

யாழ்ப்பாணத்திலிருந்து புத்தூர் செல்லும் திசையில் தந்தை, தாய், மகன் என மூவர் ஒரு மோட்டார் சைக்கி ளில் பயணித்துள்ளனர். அந்தச் சமயம் எதிரே மிகவே கமாக இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வந்துள் ளனர்.

வேகமாக வந்த இளைஞர்களின் மோட்டார் சைக் கிள் எதிரே குடும்பமாக வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு, கார் ஒன்றுடனும் மோதியது.

இதில், வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்தவர்க ளில் ஒருவர் தலை சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார். மற்றொருவர் படுகாயமடைந்தார். அவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை யும் தாயும் மகனும் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

காயமடைந்தவர்கள் அச்சுவேலி பிரதேச மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள் ளனர்.

மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிசார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## சீனாவின்...

வழங்கப்படும் அடுத்த கட்ட உதவிகளை நேரில் பரிசீலிப்பார்", என்று வெளிவிவகார அமைச்சு விடுத் துள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக் குழுவின் உப தலைவரான வாங் டொன்மிங் தலைமை யிலான குழுவினர் கடந்த புதன்கிழமை இலங்கைக்கு வந்து ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்களை சந்தித்து திரும்பியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில்...

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

குறித்த இளைஞர் உட்பட சிலர் நேற்று மாலை வீரபுரம் பகுதிக்கு சென்றுள்ளனர். அப்போதே, அந்தப் பகுதியை சேர்ந்த குழு ஒன்று இவர்கள்மீது வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில், படுகாயமடைந்த இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு செட்டிகுளம் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும், அவர் அங்கு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வறிய...

"நெலும் பியச" கலையரங்கில் நடந்த இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில் கடந்த 2023ஃ2024 கல்வியாண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியாக ஒவ்வொரு பாடப்பிரிவிலும் அதியுயர் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதற்கமைய, வடக்கு மாகாணத்தில் சாதனை படைத்த 274 மாணவர்களுக்கு, தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலைகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கௌரவ சபாநாயகர் ஜகத் விக்ரம ரத்ன, கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப் பினர்களான எஸ். சிறிபவானந்தராஜா, க. இளங்குமரன் உட்பட பலர் பங்கேற்றனர். (ஐ)

## இந்தியா...

இந்தியாவின் தரம் குறைவான மருந்து மாபியாவுக்கு எமது நாட்டின் அப்பாவி மக்களை பலி கொடுக்கும் கொடூரம் தற்போது அரங்கேறியுள்ளது. முன்னர் எமது நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகள் பிரித்தானிய தரத்தில் அல்லது அதற்கு உயர் தரத்தைக் கொண்ட வையாகவே காணப்பட்டன.

கடந்த 76 ஆண்டு கால ஆட்சியில் இந்தத் தரம் ஒரு போதும் குறையவில்லை. ஆனால், 76 ஆண்டு கால சாபத்தை நீக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த ஜே. வி. பி. அரசாங்கம் இந்தியா பாமகோபியாவின் பிடிக்குள் சிக்கி மக்களை அதற்கு பலியாக்கிக் கொண்டிருக்கிறது.

உலகில் சுமார் 33 நாடுகளிலேயே இந்தியா பாமகோபியா அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்கா போன்ற வறுமை நிலையிலுள்ள நாடுகளை தவிர, அபி விருத்தியடைந்த நாடுகள் இதனை அங்கீகரிக்கவில்லை. ஆனால், எமது அரசாங்கம் இதனை அங்கீகரித்து மக்களின் உயிர் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியுள் ளது. இதுவரையில் இரு யுவதிகள் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு மேயர் பல்தசாரின் சகோதரியின் கணவனுடைய நிறுவனத்தின் ஊடாகவே இந்த மருந்து கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவ னம் மாத்திரமின்றி ஆளும் தரப்பிலுள்ள மேலும் பல் வேறு முக்கிய புள்ளிகளுடன் தொடர்புடைய நிறுவ னங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இந்த தரம் குறைந்த மருந்துகளால் பதிவான யுவதிக ளின் உயிரிழப்புகளுக்கு யார் பொறுப்பு கூறுவது? அவர்களின் குடும்பங்களுக்கு யாரால் நியாயத்தை வழங்க முடியும்? இது மனிதப் படுகொலை அல்லவா? இதற்கு பொறுப்பு கூற யாரும் இல்லையா? இந்திய பாமகோபியாவுக்குள் சிக்கி அப்பாவி மக்களின் உயிரைப் பறிப்பதற்கான அனுமதியை நாட்டு மக்கள் அநுரகுமார திஸநாயக்கவுக்கோ அல்லது நளிந்த ஜயதிஸ்ஸவுக்கோ வழங்கவில்லை. இந்தியாவுடன் இரகசியமாக செய்து கொள்ளப்பட்ட 7 பிரதான ஒப்பந்தங்களில் இந்தியன் பாமகோபியாவுடனான ஒப்பந்தமும் உள்ளடங்குகிறது. இனியாவது இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம் - என்று நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறினார். (ஐ)

## ஜனவரி...

மாதம் இந்தியா செல்வார் என்று கூறப்படுகிறது. இதன்போது, உயர்மட்ட சந்திப்புகளில் பங்கேற்கும் அவர், மாவட்ட சபைகள் முறைமை அல்லது மக்களால் தெரிவுசெய்யப்படும் நிறைவேற்றதிகார ஆளுநர் முறைமை ஊடாக மாகாண சபை முறைமையைப் பதிலீடு செய்வதற்கான அரசாங்கத்தின் ஆலோசனை குறித்து கலந்துரையாடுவார் என்று கூறப்படுகிறது. (ஐ)

## இன்று...

இன்று முதல் காங்கேசன்துறையிலிருந்து அநுரா தரபும் வரை தினமும் ரயில் சேவைகள் நடைபெறும்.

காங்கேசன்துறையிலிருந்து காலை 6 மணிக்கு புறப்படும் யாழ்ராணி ரயில் முற்பகல் 10.17 மணிக்கு அநுராதபுரத்தை அடையும். இதேபோன்று, பிற்பகல் 2.30 மணிக்கு அநுராதபுரத்திலிருந்து புறப்பட்டு மாலை 6.53 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையும் என்று இலங்கை புகையிரத சேவை அறிவித்துள்ளது. (ஐ)

## வரும்...

வானிலை அவதானிப்பு அறிக்கையின் விவரம் வருமாறு,

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்கு திசையில் உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது மாலைதீவுகளுக்கு அருகாக நிலை கொண்டுள்ளது.

இதனால் கிழக்கு, ஊவா, சப்ரகமுவ, மத்திய, மற்றும் தென் மாகாணங்களுக்கு கிடைத்து வரும் மழை இன்றி ரவு முதல் படிப்படியாக குறைவடையும் வாய்ப்புள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்கே புதிய காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இதன் காரணமாக மீண்டும் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மழை கிடைக்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மழை எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது. ஆனால், இடையில் ஒரு சில நாட்கள் மழையற்ற நாட்களாக அமையும்.

இதேவேளை எதிர்வரும் 31ஆம் திகதி முதல் மத்திய, ஊவா, வடமத்திய, தெற்கு, சப்ரகமுவ மாகாணங்களுக்கு மழை கிடைக்க தொடங்கும். இந்தப் பிரதேசங்களுக்கும் மழை எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி வரை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மீண்டும் எதிர்வரும் ஜனவரி 10 முதல் 13ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட் டின் பல பகுதிகளுக்கும் பரவலாக மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

எதிர்வரும் 2026 ஜனவரி மாதத்தின் பெரும்பாலான நாட்கள் மழை நாட்களாக அமையும் என எதிர்பார்க் கப்படுகிறது.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் குளிரான வானிலை எதிர்வரும் 26ஆம் திகதி முதல் குறைவடையும் சாத்தியமுள்ளது. விவசாயிகள் இந்த நாட்களை கருத்தில் கொண்டு விவசாய நடவடிக் கைகளை முன்னெடுப்பது சிறந்தது - என்றுள்ளது. (ஐ)

## வடக்கில்...

சபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போது காற்றின் மாசடைவு மட்டம் 150 முதல் 200 வரை உயர்ந்துள்ளது. இது ஆரோக்கியமற்ற நிலை மையாகும் என்று நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் சுட்டிக்காட்டினார்.

எல்லை தாண்டிய வளிமாசு நகர்வு, தீவிரமடைந்துள்ள வட,கிழக்கு பருவக்காற்று ஆகிய வற்றின் தாக்கமே காற்று மாசடைவுக்கு முக்கிய கார ணம் என்றும் கடந்த ஆண்டுகளிலும் இதே காலப்பகுதி யில் இவ்வாறான நிலைமை அவதானிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், காற்று மாசுபாட்டால் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளவர்கள் (சுவாசக் கோளாறு உள்ளவர் கள், முதியவர்கள் மற்றும் சிறுவர்கள்) இதனால் உடல் நல பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடலாம். பாதிப்பு கள் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக மருத்துவ ஆலோ சனையைப் பெறுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

எனினும், இன்று முதல் காற்று மாசுபாட்டின் தன்மை குறைவடையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 13ஆம் திருத்தத்துக்கு அப்பாலும் அதிகாரங்களை பகிர வேண்டும்

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 22

13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று, நாட்டின் அனைத்து இன மக்களும் கௌரவத்துடனும் சம உரிமையுடனும் வாழக்கூடிய அதிகாரப் பகிர்வு முறையை உருவாக்க வேண்டும் என்று லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

லங்கா சமசமாஜ கட்சியின் 90ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வுக்காக, சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவராக நான் முன்னெடுத்த அதிகாரப் பகிர்வுத் திட்டங்கள் இன்றும் காலாவதியாகவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று, நாட்டின் அனைத்து இன மக்களும் கௌரவத்துடனும், சம உரிமையுடனும் வாழக்கூடிய ஒரு அதிகாரப் பகிர்வு முறையை உருவாக்குவதே சமசமாஜ கட்சியின் நீண்டகால நிலைப்பாடாகும்.

பிரித்தானிய காலனித்துவ காலத்தில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று 1950களிலேயே இக்கட்சி தீர்மானம் நிறைவேற்றிய வரலாற்றுத் தூர நோக்கை மீண்டும் நினைவூட்டுகின்றேன்.

தற்போதைய அரசியல் சவால்களை எதிர்கொள்ள இடதுசாரி சக்திகளின் ஒற்றுமை மிக அவசியமானது. 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசமைப்பை உருவாக்குவதில் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா ஆற்றிய வரலாற்று பணியைப் போன்றே, தற்போதைய காலத்திலும் புதியதோர் அரசியல் கலாசாரத்தை உருவாக்க இடதுசாரிகள் கைகோக்க வேண்டும். 90 ஆண்டு கால அரசியல் அனுபவமும் நேர்மையும் கொண்ட லங்கா சமசமாஜ கட்சி, ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகத் தொடர்ந்து ஒலிக்கும் - என்றார். (ஐ)

# சுற்றுலாவிகள் வருகை 22 இலட்சத்தை கடந்தது

கொழும்பு, டிசெ. 22

இந்த ஆண்டில் மட்டும் 22 இலட்சத்து 19 ஆயிரத்து 209 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை ஏற்பட்டபோதிலும் சுற்றுலா பயணிகளின் வருகை வீழ்ச்சியடையவில்லை என்றும் அந்த சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். அங்கிருந்து 5 இலட்சத்து ஆயிரத்து 97 சுற்றுலாவிகள் வருகை தந்துள்ளனர்.

இதேசமயம், ஜேர்மனியிலிருந்து ஒரு இலட்சத்து 39 ஆயிரத்து 355 பேரும் ரஷ்யாவிலிருந்து ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 99 பேரும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 2 இலட்சத்து 939 பேரும் அவுஸ்திரேலியாவிலிருந்து ஒரு இலட்சத்து ஆயிரத்து 12 பேரும் சீனாவிலிருந்து ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 553 பேரும் பிரான்ஸிலிருந்து ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 802 பேரும் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, இந்த மாதத்தில் கடந்த 17 நாட்களில் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 616 பேர் வருகை தந்துள்ளனர். (ஐ)

# மண்சரிவு அபாயமுள்ள பாடசாலைகள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம்!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளின் பாடசாலை களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று பிரதமர் ஹரிணி அம ரசூரிய யுனிசெவ் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டி யுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிரதமரின் பணிமனையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அனர்த்தங்களால் சேதமடைந்த பாடசாலை கட்டமைப்பை வழமைக்குக் கொண்டுவரவும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பிரதமர் இதன்போது விளக்கினார்.

மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் பாடசாலைகளை மீண்டும் திறப்பது ஆபத்தானது. அறிவியல் ரீதியான மதிப்பீடுகளின் அடிப்படையில் அத்தகைய பாடசாலைகளை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களுக்கு நிதிச்சுமை ஏற்படாத வகையில் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அனர்த்தங்களுக்குப் பிறகு மாணவர்களின் மனநலத்தை மேம்படுத்துவதில் பாடசாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், கல்வித் துறையை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் காட்டும் அர்ப்பணிப்பை பாராட்டிய யுனிசெவ் பிரதிநிதிகள் இலங்கைக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக உறுதியளித்தனர். (ஐ)

# ரூ. 10 கோடி பெறுமதியான ஐஸ்டன் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 22

சுமார் 10 கோடி ரூபாய் பெறுமதியான, "ஐஸ்" ரக போதைப்பொருளுடன் 39 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி - கரந்தெனியவில் வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.கைதானவரிடமிருந்து 9 கிலோ "ஐஸ்" ரக போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# புதிய பயங்கரவாத சட்ட வரைவு யோசனைகளை அனுப்புங்கள்!

## நீதி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 22

நீதி அமைச்சின் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்ட வரைவு தொடர்பில் யோசனைகள் மற்றும் கருத்துகளை எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன் வரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து நீதி அமைச்சர் கூறுகையில்,

பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்ட வரைவு ஜனாதிபதி சட்டத்தரணி ரின்ஸி அர்ஸகுலரத்ன தலைமையில் 17 பேர் கொண்ட குழுவினர் சுமார் 11 மாதங்களாக அவ்வரைவைத் தயாரித்து என்னிடம் கையளித்தனர். அவ்வரைவு இப்போது நீதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இது நாடளாவிய ரீதியில் மிகுந்த கரிசனைக்குரிய சட்டம் என்பதனால், அதனை நேரடியாக அமைச்சரவையிலோ அல்லது பாராளுமன்றத்திலோ சமர்ப்பிக்காமல், முதலில் பொதுமக்களிடம் அபிப்பிராயம் கோரவேண்டியது அவசியம் என்று கருதுகிறோம்.

எனவே இப்புதிய சட்ட வரைவு தொடர்பான யோசனைகள் மற்றும் கருத்துக்களை எதிர்வரும் 2026 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

# ஆளும் கட்சி எம். பிக்கு எதிராக பொலிஸ் அலுவலர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 22

ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமாரவின் குழுவினர் தன்னை தாக்கினர் என்று பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும், பாதிக்கப்பட்டவர் மருத்துவமனையில் சிகிச்சையிலுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

எம். பியின் மாமனார் என்று கூறப்படுபவரின் காணியில் கஞ்சா தோட்டத்தை சுற்றிவளைத்த சம்பவம் தொடர்பிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், சாந்த பத்மகுமார எம். பியும் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

கடந்த 16ஆம் திகதி தோட்டம் ஒன்றில் பொலிஸார் கஞ்சா செடி ஒன்றை கைப்பற்றியிருந்தனர். அந்த கஞ்சாவை பயிரிட்டருக்கு நீதிமன்றம் 3 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. குறித்த காணி சாந்த பத்மகுமார எம். பியின் மனைவியின் தந்தையுடையது என்றும் அந்தக் காணி குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. (ஐ)

# ஜனவரியில் எரிபொருள் விலை திருத்தம் குறித்து முடிவு இல்லை

கொழும்பு, டிசெ. 22

ஜனவரி மாதத்துக்கான எரிபொருள் விலை திருத்தம் குறித்து இதுவரை எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்று இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதன் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே இது குறித்து கூறுகையில்,தேசிய எரிபொருள் தேவையை நிறைவு செய்யும் வகையில் முறையான திட்டமிடல், இறக்குமதிகள் ஊடாக எரிபொருள் இருப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. நாட்டின் களஞ்சிய வசதிக்கு ஏற்ப 20 முதல் 30 நாட்களுக்குத் தேவையான இருப்பு பராமரிக்கப்படுகிறது. அத்துடன் சமீபத்திய எரிபொருள் இருப்புகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என அவர் உறுதிப்படுத்தினார்.

மேலும், ஜனவரி மாதத்துக்கான எரிபொருள் விலை திருத்தம் குறித்து இதுவரை எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. கிடைக்கப்பெறும் தரவுகளின் அடிப்படையில் விலை திருத்தங்கள் தொடர்ச்சியான செயல்முறையாக முன்னெடுக்கப்படும் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# 45 பாகைக்கு குறைவான இடங்களிலும் மண்சரிவு அபாயம் அதிகரித்துள்ளது!

கொழும்பு, டிசெ. 22

அதிக மழைவீழ்ச்சி காரணமாக, 45 பாகைக்கும் குறைவான சரிவு பகுதிகளிலும் மண்சரிவு ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் ஆய்வு துறையின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட பேராசிரியருமான அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதனால், மண்சரிவு அபாய வலயங்களை மீண்டும் புதிய முறையில் வரைபடமாக்குவது அவசியமானது. பொதுவாக 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகும் போது 45 பாகை சரிவு கொண்ட பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்படுகின்றன.

இருப்பினும், தற்போதைய சூழலில் 500 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி கிடைக்கும் இடங்களில், சரிவு குறைவாக இருந்தாலும் மண் தட்டுகள் கனமாக இருந்தாலும் பெரும் மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது.

குறைந்த சாய்வு கொண்ட பகுதிகளில் மண்சரிவு அபாயத்தைக் கண்டறியும் நோக்கில், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் 12 மாவட்டங்களை மையப்படுத்தி புதிய வரைபடமாக்கல் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் புவியியலாளர்கள், பேராதனை பல்கலைக்கழக புவியியல் ஆய்வுத் துறையின் மாணவர்கள், இதர விசேட ஆய்வுப் பிரிவினர் கலந்துகொள்ளவுள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மண்சரிவில் சிக்கியவரின் உடல் பாகங்கள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 22

பதுளை மண்சரிவில் சிக்கி காணாமல் போனவரின் உடல் பாகங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

பதுளை - பசறை - ஆக்கரத்தென்ன பகுதியில் கடந்த 27 ம் திகதி ஏற்பட்ட மண்சரிவில் 50 வயதான முன்னாள் படை சிப்பாய் காணாமல் போயிருந்தார்.

அவரின் உடல் பாகங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட உடல் பாகங்கள் அவருடையவை என்பதை அவரின் மனைவி உறுதிப்படுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org